# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 254/மா/2017

ஆணை எண். 289/2017

நாள் : 19/12/2017

திருமதி R. செல்வி,
சென்னை – 57. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம் – 1,
சென்னை மாநகராட்சி. – எதிர் மனுதாரர்

சென்னை, எண்ணூர், சத்தியவாணிமுத்து நகர், 14–வது தெரு, 21/6 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி R.செல்வி என்பவர், திருவொற்றியூர் நகராட்சியில் தோட்டப் பணியாளராகப் பணியாற்றி 30.09.2006 அன்று வயது மூப்பின் காரணமாக பணியிலிருந்து ஒய்வு பெற்றுள்ளார். அவர் தனது சேமநல நிதிக்கான வட்டித் தொகை வழங்கப்படவில்லை என இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். முறையீட்டு மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட ஆவணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. முறையீட்டு மனுதாரர் 60 வயதினைக் கடந்த மூத்த குடிமகன். மனுதாரரின் கோரிக்கைக் குறித்து தனிக்கவனம் செலுத்தி சேமநல நிதிக்கான வட்டித் தொகையை வழங்க விதிகளின்படி உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது. இந்நேர்வு குறித்த அறிக்கையினை உரிய காலத்தில் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பவும் ஆணையிடப்படுகிறது.

2017– ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 19–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. உதவி ஆணையர்,
மண்டலம் .1,
எண்.947, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
சென்னை மாநகராட்சி,
சென்னை – 600 019 (இணைப்புடன்).

2. திருமதி R. செல்வி,
21/6, 14 வது தெரு,
சத்தியவாணிமுத்து நகர்,
எண்ணூர், சென்னை – 600 057.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்